# குறிஞ்சித் தேனீ

**ஆசிரியர் : கண்டி இரா.அ. இராமன்**


























தினந்தோறும் தினக்குரலை வாசியுங்கள். உலக நடப்பு அறிவை மாத்திரமல்ல,
உங்கள் அன்பு செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்கும்
ஒரு சிறந்த ஊடகமாக திகழ்கின்றது உங்கள் தினக்குரல்.

ஜூலை-2008

தேன்கூடு – 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினக்குரல் ஆசிரிய பீடம்

| | | |
|---|---|---|
| நாளிதழ் பிரதம ஆசிரியர் | :- | வீரகத்தி தனபாலசிங்கம் |
| வார இதழ் ஆசிரியர் | :- | பாரதி இராஜநாயகம் |
| செய்தி பிரதம ஆசிரியர் | :- | கே.ஆர்.பி. ஹரன் |
| பிரதி செய்தி ஆசிரியர் | :- | டி. சிவகணேசன் |
| மலையக செய்தி ஆசிரியர் | :- | ஜீவா |

## வெளியீட்டு நிறுவனத்தினர்

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | எஸ்.பி.சாமி |
| நிர்வாகப்பணிப்பாளர் | :- | பி.கணேசராஜா |
| பணிப்பாளர் | :- | பி.கேசவராஜா |

## தினக்குரல் கல்வி, மற்றும் இலவச இணைப்பிதழ்கள் ஆசிரியர்கள்

"வாரவித்தியாரம்" "அறிவு ஆரம்" - சத்தியா நரேந்திரன்

| | |
|---|---|
| உதவி ஆசிரியர் | - செல்வி பிரியா |
| மலைகயப் பார்வை | - ஆர். பாரதி இராமச்சந்திரன் |
| பரிசு | - எஸ். இராமச்சந்திரன் |

## விநியோக முகாமையாளர்

கே.கே. சற்குணம்

இவர்களோடு தொடர்புகொள்ள

011-2522555 - 011-2523216



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி முடிதல் வேண்டும்
நல்லவே எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
-பாரதி-

# குறிஞ்சித்தேனி

ஜூலை 2008

ஆசிரியர்:கண்டி - இரா.அ. இராமன்

தொடர்புகளுக்கு:-
தினக்குரல் கண்டிக் கிளை,
135-17/3 கொட்டுக்கொடல்ல வீதி,
கண்டி.

ஆலோசகர்:-
எஸ். தமிழ்ச்செல்வன்
கண்டி வலய உதவி கல்விப் பணிப்பாளர்

தொ.பே.: 081-4933090
077-4340357

போர்ப் படைதனில் தூங்கியவன்
வெற்றியிழந்தான்-உயர்
பள்ளியில் தூங்கியவன்
கல்வியிழந்தான்
கடைதனில் தூங்கியவன்
முதல் இழந்தான்-கொண்ட
கடமையில் தூங்கியவன்
புகழ் இழந்தான்-இன்னும்
பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால்-பல
பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா!
பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்

**உங்களோடு கொஞ்சம் நேரம்...**

தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரலாக கடந்த 11 வருடங்களாக தினக்குரல் உங்கள் கரங்களில் தவழ்ந்து வருகின்றது. எவ்வளவோ பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து "விழுந்தாலும் எழுந்து நிற்போம்" என்ற வைறாக்கியத்தோடு மக்களுக்கான தனது பயணத்தை தொடர்கின்றது. அத்தோடு இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளுக்காக அயராது குரல்கொடுத்து வரும் தேசிய பத்திரிகைகளில் தினக்குரலும் தனது பணியை சிறப்பாகச் செய்து வருகின்றது. தொடர்ந்து எந்த இடர்கள் வந்தாலும் துணிந்து தனது குரலை ஓங்கி ஒலிக்கச் செய்கின்றது. அத்துடன் வாரத்திற்கு 5 இலவச இணைப் பிதழ்களையும் வழங்கி வருகிறது. மாணவர்களின் கல்வி மேம்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக "வாரவித்தியாரம்" "அறிவு ஆரம்" "ஜூனியர் ஸ்டார்" போன்ற இலவச கல்விஇதழ்களை வழங்கி வருகிறது. மலையக மக்களின் பிரச்சனைகளை அவர்களது துன்ப துயரங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் "மலையகப்பார்யையும்", பரிசு இதழையும், ஞாயிறு இதழோடு வழங்கி வருகிறது. பெற்றோர்களே, ஆசிரியர்களே மாணவர்களின் கல்விக்கண்களைத்திறக்க உங்கள் கரங்களை உயர்த்துங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு இவற்றை வாங்கி கொடுத்து உங்கள் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கு உதவுங்கள்

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளுக்கு அரை விலையில் தினக்குரல் விநியோகம்



மத்திய மாகாண தமிழ் கல்வியமைச்சர் எஸ். அருள்சாமி அவர்களுக்கு தினக்குரல் பணிப்பாளர் பி. கேசவராஜா பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதை காண்கீர்கள்



பிரதிகல்வி அமைச்சர் எம் சச்சிதானந்தன் அவர்களுக்கு தினக்குரல் விநியோக முகாமையாளர் கே.கே. சற்குணம் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதை காண்கீர்கள்

மாணவர்களின் கல்வி மேம்பாட்டை கருத்தில் கொண்டு பாடசாலைகளுக்கு அரை விலையில் தினக்குரல் பிரதிகளை வழங்க எமது நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. எமது முதல் முயற்சியாக நுவரெலியா மாவட்ட பாடசாலைகளுக்கு மத்திய மாகாண இந்து கலாசார. தமிழ் கல்வி அமைச்சர் எஸ்.அருள்சாமி அவர்களின் ஏற்பாட்டோடும். பதுளை மாவட்ட பாடசாலைகளுக்கு பிரதி கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் அவர்களின் ஏற்பாட்டோடும். அப்பாடசாலைகளுக்கு அரை விலையில் தினக்குரல் பிரதிகள் வழங்கப்படுகிறது.

அன்பான அதிபர்களே. உங்கள் பாடசாலைகளுக்கும் இத்திட்டத்தின் கீழ் தினக்குரல் பிரதிகளை பெற விரும்பினால் பாடசாலைகள் கீழ் காணும் முகவரியோடு தொடர்பு கொள்ளவும்.

**கல்வி கற்பது தோல்வியடைவதற்கல்ல**
**கற்பது வெற்றியடைய**
**தோற்பதென்பது புரியாமையாலுருவானது**
**வெற்றியென்பது சீரிய சிந்தனையிலுருவாவது**
**புரியாதவர்களாய் புலம்பாமல்**
**சீரிய சிந்தனையாளராய் அரியணை கண்டிட**
**அனைத்து மாணவச் செல்வங்களை அழைக்கிறோம்**

தினக்குரல் கண்டிக்கிளை.
135-17/3 நபிஷா பில்டிங்.
மூன்றாவது மாடி.
கொட்டுக்கொடல வீதி.
கண்டி.
தொ.பே.இல.081-4933090



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அதிபர்களுக்கு.

தினக்குரல் ஞாயிறு இதழோடு வெளிவரும் 'பரிசு' சிறுவர் இதழில் உங்கள் பாடசாலையும் அறிமுகப்படுத்த வேண்டுமா? இதோ அதற்கான விபரங்கள்.

1. பாடசாலை அறிமுகம்
2. அதிபரின் உரை
3. மாணவர்களின் ஆக்கங்கள் (அவர்களது புகைப்படத்துடன்)
4. ஆசிரிய குலாமின் இணைப்புப் படம்
5. மாணவர்களின் ஓவியங்கள்
6. மாணவர் மன்றம். இலக்கிய மன்றம் . மாணவர்களது விளையாட்டுத்துறை சம்பந்தமான படங்கள்.
   குறிப்புக்கள்.
7. மாணவர்களின் திறமைகள் சம்பந்தமான விபரங்கள் போன்றவற்றை அனுப்பி வையுங்கள்.

தொடர்புகளுக்கு
தினக்குரல் கண்டிக்கிளை
135-17/3 நபிஷா பில்டிங்
மூன்றாவது மாடி
கொட்டுக்கொடல வீதி
கண்டி
தொ.பே.இல.081 - 4933090

## மனிதன்! மனிதன்! மனிதன்!

மனிதன்! மனிதன்!
எவன் தான் மனிதன்?
வாழும் போது செத்துச் செத்துப்
பிழைப்பவன் மனிதனா?
வாழ்ந்த பின்னும் பேரை நாட்டி
நிலைப்பனும் மனிதனா?
பிறருக்காகக் கண்ணீரும்
பிறருக்காக செந்நீரும்
சிந்தும் மனிதன் எவனோ அவனே
மனிதன்! மனிதன்! மனிதன்!

எடுத்துக்கொண்ட காரியம்
நிறைவேறி முடியும் வரையும்
பிறிதொன்றின் மேல் மனதைச்
செல்லவொட்டதுத் தடுத்துக்
கருமமே கண்ணாயிருத்தல்
வேண்டும். கல்வியைச்
சம்பாதிக்க விரும்புகிறவன்
இரவு பகலாகக் கல்வியின்
எண்ணமே உடையவனாய்
இருத்தல் வேண்டும்.

- சுவாமி விபுலானந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் அறிமுகம்

# தமிழ் இலக்கிய உலகின் ஜாம்பவான் ஜெயகாந்தன்

தமிழ் இலக்கிய எழுத்துலகில் ஜாம்பவானாக ஒரு காலத்தில் கொடிக்கட்டி பறந்தவர் சிறுகதை சிற்பி ஜெயகாந்தன்.

அன்று தமிழக வர்த்தக இதழ்களில் தனது படைப்புகளை பிரசுரித்து சாதாரண வாசகன் மத்தியிலும் கொண்டுச் சென்ற பெருமைக்குரியவரும் இவரே.

இதுவரை 250க்கு மேற்பட்ட சிறுகதைகளையும், 35க்கு மேற்பட்ட குறு நாவல்களையும், 15க்கு மேற்பட்ட நாவல்களையும், 600க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இலக்கிய பங்களிப்பிற்காக, "இந்திய சாகித்திய அகடமி விருது", "சோவியத் நாட்டு நேரு விருது", "ராஜ ராஜன் விருது" போன்ற உயர் விருதுகளை பெற்றவர்.

இவரது இலக்கியப் படைப்புகள் பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நவீன தமிழ் இலக்கியத்திற்கும், உலகத் தமிழ் எழுத்தாளர்களுக்கும் உரிய கௌரவத்தை பெற்றுத்தந்த பெருமையும் இவரையே சாரும்.

இந்தியாவின் இலக்கிய உயர் விருதான ஞான பீட விருது இம்முறை இவருக்கு வழங்கியுள்ளார்கள்.

தமிழ்நாடு கடலூர் பழையப்பட்டினம் ஊரில் தண்டபாணிப்பிள்ளை மகாலட்சுமி தம்பதியினரின் புதல்வரான இவர் ஆறாம் வகுப்பு வரை மட்டுமே கல்வி கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது 70 வயதை கடந்துள்ள ஜெயகாந்தனிடமிருந்து மேலும் பல அரியபடைப்புகளை இலக்கிய உலகம் எதிர்பார்க்கின்றது.


## பாடசாலை அதிபர்களுக்கு.

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக்குரலாக கடந்த 11வருடங்களாக வெளிவருகின்ற "தினக்குரல்" நாளிதழ் "தினக்குரல்"வார இதழ் தமிழ் பேசும் மக்களின் சமூக அரசியல் பொருளாதார விடயங்களைத் தாங்கிவெளிவருகிறது. அத்துடன் மாணவர்களின் கல்வி மேம்பாட்டை கருத்தில் கொண்டு கல்வி இதழ்கள் தினக்குரலோடு இலவச இணைப்பிதழ்களாக வெளிவருகின்றது. பெற்றோர்களே, ஆசிரியர்களே, அதிபர்களே உங்கள் பிள்ளைகளுக்கு, உங்கள் மாணவர்களுக்கு இவற்றை வாங்கி கொடுத்து உங்கள் பிள்ளைகளின் கல்வி கண்களை திறந்து விடுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பத்திரிகைகளின் பங்கும் பணியும்

க.நாகேஸ்வரன்

முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை சப்ரகமுவப் பல்கலைக்கழகம்.

தமிழ் உரைநடை புனைகதை(Fiction)இலக்கிய வளர்ச்சியில் இன்றைய தமிழ்ப்பத்திரிகைகள் பெரும் பங்களிப்பினைக் காத்திரமாக ஆற்றிவருகின்றன. படைப்பாளிகளின் களமாகவே இன்று தமிழ்ப் பத்திரிகைகள் தொழிற்படுகின்றன. ஆரம்பகாலப் பத்திரிகைகள் முதல் இன்றைய பத்திரிகைகள் முதல் பெரும் இலக்கிய பங்களிப்பினை ஆற்றி வருவது அனைவரும் அறிந்த விடயமே.

இலக்கியப் பங்களிப்பு என்று நோக்கும் போது. நவீன தமிழ் இலக்கிய வடிவங்கள் அனைத்துக்கும் களம் கொடுத்து அவற்றை வெளியிட்டுத் தமிழ்ப் பணிக்குதவுகின்றன. இலைமறைகாயாகத் திறமையும் எழுத்து வளமும் உடைய இலக்கியப் படைப்பாளியொருவரை அறிமுகப்படுத்தும் பணியைப் பத்திரிகைகள் செய்துவருகின்றன.

மொழிப்பயன்பாட்டு முறையிலே நிலவும் நுட்பங்களையும் சூட்சுமங்களையும் எழுத்தாளன் தனது ஆக்க இலக்கியப் படைப்பில் துல்லியமாக வெளிப்படுத்திக் காட்டுவதற்கும் பரப்புவதற்கும் பத்திரிகைகள் பெரிதும் துணைப்புரிகின்றன. பத்திரிகைகளின் மகத்துவம் மொழி மூலம் சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்துவதாகும்.தமிழ்மொழி வரலாற்றிலும் இலக்கிய வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க இடத்தைத் தமிழ்ப் பத்திரிகைகள் வகித்து வந்துள்ளன.பத்திரிகை நிறுவனங்களின் கருத்து நிலைகளும் எழுத்தாளர்க்கு-முதன்மை இடத்தை அளித்துள்ளமை கவனத்திற்குரியது.பத்திரிகை நிறுவனத்தினரின் 'கொள்கை' என்பது படைப்புத் திறனுக்கு முதன்மையளிப்பதால் பெரிதும் உயர்த்தி மதிக்கப்படும்.

சமூகத்தின் கல்வியாளர்கள் சிந்தனைச் சிற்பிகள். சீர்த்திருத்தவாதிகள் மொழியியலறிஞர்கள். விமர்சகர்கள். எழுத்தாளர்கள் என்ற பலதிறம்பட்டோரும் பத்திரிகைகளிலே தத்தமது காத்திரமான பங்களிப்புக்களை நல்கித் தமிழுக்குச் சேவையாற்றி வருகின்றனர்.

"பத்திரிகை என்பது பழமை மாறாத புதிய நுட்பங்களைத் தன்னுள் புகுத்திக் கொண்டிருக்கும் ஒரு ஊடகம்" எனலாம்.

பத்திரிகைகளின் இடத்தை எந்த நவீன ஊடகமும் அழிக்கவே முடியாது. அன்றாட நிகழ்வுகளை அறியவும் அந்நிகழ்வுகளின் அடிப்படைகளைப் புரியவும் அறிவினை வளர்க்கவும் மனமகிழ்வினைக் பெருக்கவும் வழிசெய்கின்ற வகைளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகள் இன்று எம்மை ஆளுகை செய்யத் தொடங்கியுள்ளன. 1934 ஆம் ஆண்டு வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் The Journalist என்னும் 86 பக்கச் சஞ்சிகையை 'ஈழநாடு' பத்திரிகையின் வெள்ளிவிழாவின் போது வெளியிட்டது. 1965இல் சிரித்திரன் ஆசிரியர் சிவஞானசுந்தரம் "புதினப்பத்திரிகை புனிதப்பத்திரிகையாகப் பவனிவர வேண்டும் புனிதப்பத்திரிகை மக்களின் சர்வகலாசாலை" என்றார்.

இன்றைய பத்திரிகைகள் தருகின்ற அறிவே பலருக்கு உலக நிகழ்வுகள் பற்றிய முழுமையான அறிவாகி வருகிறது. என்ன நிகழ்வு நடந்தாலும் உடனே அவற்றை ஆய்ந்தறிந்து விவரம் தேடி விளக்கமாகவும் விரிவாகவும் பத்திரிகைகள் வெளியிடுகின்றன.நிகழ்வுகளின் குறிப்புகள் பின்னணிகள் விளக்கங்கள். விவரங்கள். விமர்சனங்கள் என்பவற்றைப் பத்திரிகைகள் தேடித் தந்துவிடுகின்றன.

"ஒரு நாள் மட்டும் உயிர்வாழும் சக்தி கொண்டவை பத்திரிகைகள் என்றும் வாழ்நாள் முழுவதும் வாழும் சக்தி கொண்டவை அவை" என்றுஞ் சிறப்பிக்கப்படுகின்றன.

நன்றி
பேராசிரியர் வை.நந்தகுமாரின்
மணிவிழா மலர் - 2008




ஸ்ரீலங்கா முஸ்லீம் மீடியா போரத்தின் 13 வது வருடாந்த மாநாடு அண்மையில் கொழும்பு நகரோதயா மண்டபத்தில் நடைபெற்றபோது. பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட வீரகேசரி நிறுவனத்தின் பணிப்பாளர் குமார் நடேசன் சுடர்ஒளி நிறுவனத்தின் பணிப்பாளர் சரவணபவன். தினக்குரல் நிறுவனத்தின் தலைவர் எஸ்.பி. சாமி ஆகியோர்களுக்கு நினைவு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. படத்தில் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலான எஸ்.பி. சாமிக்கு விருது வழங்குவதை காண்கீர்கள்.

படம் எம்.எல். லாபீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்குரல் கண்டி கிளையின் ஏற்பாட்டில் கண்டி தொலஸ்பாகைத் தமிழ் வித்தியாலயத்தின் 21வது ஆண்டு விழா

கண்டியிலிருந்து 42 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள தொலஸ்பாகை பிரதேசம் இயற்கை அன்னை கொஞ்சி விளையாடும் கண்கொள்ளாக் காட்சிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இப்பிரதேசத்தில் தொலஸ்பாகைத் தமிழ் வித்தியாலயம் அமைந்துள்ளது. இவ் வித்தியாலயம் கடந்த 21 வருடமாக இயங்கிவருகின்றது.

அண்மையில் இவ்வித்தியாலயத்தின் 21ஆவது ஆண்டு விழா தினக்குரல் கண்டிக் கிளையின் ஏற்பாட்டில் வித்தியாலய அதிபர் இராமலிங்கம் ஸ்ரீதரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கண்டியிலிருந்து சமூகத்தொண்டரும். கண்டி இந்து இளைஞர் மன்றத் தலைவருமான பெ. பாலசுப்பிரமணியம்(JP), சமூகத்தொண்டரும். மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஆலோசகருமான சேகரன் சோமபாலன்(JP), சமூக சேவகி திருமதி. சந்திரவதனா ரட்ணராஜ குருக்கள்(JP) ஆகியோர்களோடு சிறப்பு பேச்சாளராக எழுத்தாளரும். நாவலாசிரியரும். கண்டி வலய கல்விப் பணிப்பாளருமான எஸ் தமிழ்செல்வன் மற்றும். தினக்குரல் கண்டிக் கிளை முகாமையாளர். கண்டி இரா. அ. இராமன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இங்கு உரையாற்றிய அதிபர் இராமலிங்கம் ஸ்ரீதரன். ஈஷஈஷமாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு தினக்குரல் ஆற்றி வருகின்ற சேவைகளைப் பாராட்டினர். எமது பாடசாலை மாணவர்களுக்கு தினக்குரல் இலவச இணைப்பிதழ்களான "வாரவித்தியாரம்". "அறிவு ஆரம் "ஜூனியர் ஸ்டார்" மற்றும் "பரிசு" போன்ற இதழ்களை வாங்கி வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினேன். தற்போது எமது மாணவர்கள் இவற்றை வாசித்து பயன்பெறுகின்றார்கள் என்றார்.

அத்துடன் 11 ஆண்டுகள் இப்பாடாசலையை வழிநடாத்தி இப்பாடசாலையை இந்த அளவுக்கு உயர்த்திய அமரர் முத்து இராமசாமி அவர்களின் திருவுருவப்படம் அவரது குடும்பத்தவர்களால் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து உரையாற்றிய எஸ். தமிழ்ச்செல்வன் "தினக்குரல்" இலவச கல்வி இணைப்பிதழ்கள் மாணவர்களுக்கு எந்த அளவு பயன் பெறுகிறது என்றும். கல்வி எம்மைத் தேடி வராது நாம் தேடி போகவேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கும் தேடல் முக்கியம். தேடல் மூலம்தான் நாம் அதிக நன்மைகளைப் பெறலாம் என்றும். தினக்குரல் வழங்குகின்ற கல்வ இலவச இணைப்பிதழ்கள் மாணவசமூகம் பெரும் பயனை அடையலாம் என்றும் கூறினார்.

அதனையடுத்து கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இப்பாடசாலை ஆசிரியைகளான பி.தேவகுமாரி. ஏ.எப் மரியநாயகி ஆகியோர்களின் நெறியாள்கையில் பாரம்பரிய கலைகளான காவடி. கரகம். கோலாட்டம். சிலம்படி. காமன்கூத்து போன்ற கலை வடிவங்கள் ஒரே காட்சியில் மேடையேற்றப்பட்டமையும். இக்கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்திருந்ததும். பார்வையாளர்களை கவர்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதனையடுத்து சிறப்புவிருந்தினர்களில் ஒருவரான சேகரன் சோமபாலன் மாணவர்களுக்கு பாடசாலை பைகளை (பேக்ஸ்) அன்பளிப்பாக வழங்கினார். திருமதி. சந்திரவதனா ரட்ணராஜ குருக்கள் மாணவர்களுக்கும். பெற்றோர்களுக்கும் தினக்குரல் பிரதிகளை வழங்கினார்.

பிரதம விருந்தினர் பெ. பாலசுப்பிரமணியம் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கினார். அத்துடன் தினக்குரல் கல்வி இதழ்களைப்பற்றி உரையாற்றிய நான்கு மாணவர்களுக்கு வாசிப்பு புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கினார்.

இந்நிகழ்வில் சிறந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு இடம்பெற்றது. திருமதி. சந்திரவதனா ரட்ணராஜ குருக்கள் மாணவர் இருவருக்கு பதக்கம் அணிவித்து கௌரவித்தார்.

அடுத்து இப்பாடசாலையிலிருந்து மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர்களுக்கு அதிபர் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களுக்கு அதிபர் அவர்களால் நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது. நன்றி உரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

கண்டி இரா. அ. இராமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக்கு வித்தாகும் ஆரங்கள்

இரா. சர்மிளாதேவி B.A.(Hons)
ஆசிரியை,
திரித்துவக் கல்லூரி,
கண்டி.

**"காரிருள் அகத்தில் நல்ல**
**கதிரொளி நீதான் இந்தப்**
**பாரிடைத் துயில்வோர் கண்ணிற்**
**பாய்ந்திடும் எழுச்சி நீதான்**
**ஊரினை நாட்ட இந்த**
**உலகினை ஒன்று சேர்க்கப்**
**பேரறிவாளர் நெஞ்சிற்**
**பிறந்த பத்திரிகைப் பெண்ணே"**

என்று பத்திரிகைகளுக்குப் புகழாரம் சூட்டுகின்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

பத்திரிகைகளின் பணி மகத்தானது. அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல், வாணிபம் செய்தல் என அப்பணிவிரியும். அவற்றுள், அறிவித்தலும் அறிவுறுத்தலும் பிரதான பணிகளாகும். பத்திரிகைகள் செய்திகளை அறிவிப்பதுடன், வாசகரின் சிந்தனையைத் தூண்டி, சமுதாய ஏற்றத்துக்கு வித்திட வேண்டும். காலத்திற்கேற்ப புதிய பணிகளை ஏற்றுச் செயற்படவும் வேண்டும். குறிப்பாக, மாணவர் சமுதாயம் சேமமுறக் கல்விப்பணி செய்தல் அவசியமாகும். இவற்றைச் செம்மையுறச் செய்வதில் தினக்குரலின் இலவச இணைப்பிதழாக திங்கள்தோறும் வெளிவரும் "வாரவித்தியாரமும்" வெள்ளிதோறும் வெளிவரும் "அறிவு ஆரமும்" சிறந்து விளங்குகின்றன.

மாணவர்களின் கற்றல் நிலைகளில், புலமைப் பரிசில் பரீட்சை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரணதர)ப் பரீட்சை, கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை ஆகியவை பிரதானமானவை. இப்பரீட்சைகளின் பெறுபேறுகள் மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்றன. இதனால், இப்பரீட்சைகள் தொடர்பாக அறிவூட்டுவது பத்திரிகைகளின் தேவையாகின்றது. இத்தேவையைக், கச்சிதமாகவும் காத்திரமாகவும் வித்தியாரமும் அறிவு ஆரமும் செய்து வருவது பாராட்டுக்குரியது. பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களின் கற்றல் தேவையைப் பூர்த்திசெய்யவும், துறைசார் அறிவை விருத்தி செய்யவும், அறிவும் ஆற்றலும் அனுபவமும் கற்பித்தல் திறனுமுடைய அறிஞர் தம் இதய ஓடை ஆழநீர்தன்னை மொண்டு செறிதரும் மாணவர் எண்ணம் செழித்திட ஊற்றுவது, போற்றுதலுக்குரியது.

அறிவுக்கு வித்தாகும் இவ்வாரங்கள் மாணவர்களைக் கேட்டல் நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு இட்டுச் செல்கிறது. எளிமை, இலகுவில் புரிதல், ஐயம் தெளிதல் உறுதிப்பாடு, நம்பகத்தன்மை, தகவல் சேகரிப்பு சுயகற்றல் மீள்பார்வையிடும் வசதி, கற்றவற்றைப் பகிர்ந்து கொள்ளும் வசதி முதலானவற்றுக்கு இவை வழிசமைக்கின்றன.

மேலும், இவ்வாரங்கள் மாணவர்களுக்கு மட்டுமல்லாது, ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றோர்கள் என அனைத்துத் தரப்பினரின் அறிவுவிருத்திக்கும் வித்தாகின்றது. இவ்வாரங்கள் மேலும் சிறப்பு பெற, வடிவமைப்பில் கூடிய கவனமும் நிகழ்ச்சிகளைத் தரப்படுத்துவதற்கும் செப்பனிடுவதற்கும் அவ்வவ் துறைசார் அறிஞர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளுதல் நன்று அத்துடன், துறைசார் அறிஞர்களின் தரக்கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டு ஆக்கங்கள் பிரசுரமாகுமாயின் இவ்வாரங்கள் புகழாரங்களைச் சூட்டிக் கொள்ளும்.

நிறைவாக, மாணவர் முதல் அனைவரின் கல்வி வளர்ச்சியிலும் பெரும் பணியாற்றிவரும் இவ்விரு ஆரங்களுக்கும், இவற்றை இலவச இணைப்பிதழ்களாக வெளியிடும் தினக்குரலுக்கும் அதன் ஆசிரியர் குழாத்திற்கும் நன்றிகளும் பாராட்டுதல்களும் உரித்தாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்



கண்டி விவேகானந்தா
தமிழ் மகா வித்தியாலயத்தின்
அதிபர் மு. சிவகுமாரோடு ஒரு நேர்காணல்
நேர்கண்டவர்
வே. பிரதிபா

கேள்வி:-

அதிபர் அவர்களே, உங்களைப் பற்றி.......

பதில்:-

1988-08-29 ஆம் திகதி ஆசிரியராக எனது பணியைத் தொடங்கி 1993-06-01 ஆம் திகதி அதிபராகப் பதவி உயர்வு பெற்றேன். இதற்கு முன்னர் மூன்று பாடசாலைகளில் அதிபராகப் பணி புரிந்த பின்னர் நான்காவது பாடசாலையாகவே இங்கு பணிபுரிகின்றேன்.

2. கேள்வி:-

இப்பாடசாலையில் துணை அதிபராக எத்தனை ஆண்டுகள் கடமையாற்றியுள்ளீர்கள்?

பதில்:-

5 வருடங்கள்

3. கேள்வி:-

எத்தனையாம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்றீர்கள்

பதில்:-

25-09-2006

4. கேள்வி:-

இப்பாடாசலையை தாங்கள் பொறுப்பேற்ற பிறகு, பெரும் மாற்றங்களையும், அபிவிருத்தியையும் பெற்று வருகிறது இது எப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியமானது?

பதில்:-

தகுந்த திட்டமிடலும், அதனை அமுல்படுத்த ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் ஒத்துழைப்பும் இருப்பதே காரணம்

5. கேள்வி:-

இப்பாடசாலையை தாங்கள் பொறுப்பேற்ற பிறகு, மாணவர்களின் கல்வித் தரம் உயர்ந்துள்ளதா? மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா?

பதில்:-

ஆம், இன்றும் ஓரிரு வருடங்களில் மேலும் அதிக மாற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கும்.

6. கேள்வி:-

ஒரு பாடசாலைக்கு முக்கியமானது வாசிகசாலை தங்கள் பாடசாலையில் இயங்கும் வாசிகசாலையை மாணவர்கள் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள்.

பதில்:-

தகுந்த வாசிகசாலை அறையொன்று இல்லாத போதிலும், வகுப்பு ரீதியாக புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டு மாணவர்களின் வாசிப்புத் திறன் வளர்க்கப்படுகின்றது. தற்போது, ஓர் சிறிய இடம் புதிதாக வாசிகசாலைக்காக, நிர்மாணிக்கப்படுகின்றது.

7. கேள்வி:-

தினக்குரல், இலவச இணைப்புக்களான "வாரவித்தியாரம்" "அறிவு ஆரம்" "ஜுனியர்ஸ்டார்" போன்ற கல்வி இதழ்களைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்:-

இவ்விணைப்பிதழ்கள், பிள்ளைகளின் ஆக்கத்திறன் வளரச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பதோடு கல்வி வளர்ச்சிக்கும், பொது அறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் துணைபுரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக எழுத்தாளர் அறிமுகம்

## சி.வி. வேலுப்பிள்ளை

மலையக இலக்கியத்தை ஆங்கில மொழி மூலம் உலக அரங்கதிற்கு கொண்டுச் சென்ற மூத்த எழுத்தாளர் தனது தொழிற்சங்கம் மூலம் மலையகதிற்குத் பெரும் பங்காற்றியவர்.

## மு.சிவலிங்கம்

தனது சிறுகதைகள் மூலம் மலையக மக்களின் துன்ப, துயரங்களை வெளிச்சத்திற்கு கொண்டுச் சென்றவர். சி.வி. யின் சில படைப்புகளை தமிழுருவில் கொண்டு வந்தவர் அரசியல், தொழிற்சங்கம் மூலம் இவர்களின் விடிவுக்கு முகம் கொடுத்தவர்.

## தெளிவத்தை ஜோசப்

தனது சிறுகதைகள் மூலம் மலையகத்துக்கு பெருமைச் சேர்த்தவர். "பாட்டிச் சொன்ன கதை" "மீன்கள்" போன்ற இவரது சிறு கதைகள் உலகத்தரத்திற்கு அமைந்துள்ளது என விமர்சகர்கள் பாராட்டியுள்ளனர்.

## சாரல் நாடன்

மலையக மக்களைப்பற்றி ஆய்வும்,
மற்றும் சிறுகதை, கட்டுரைகள்
மூலம் உலகறியச் செய்த மூத்த எழுத்தாளர்.

## டாக்டர் தி. ஞானசேகரன்

மலையகத்தில் நீண்டகாலம் டாக்டராக பணிப்புரிந்தவர். அம்மக்களோடு ஒன்றி வாழ்ந்தவர். மலையக மக்களின் துன்ப வாழ்வியலை "குருதி மலை" எனும் நாவல் மூலம் வெளிப்படுத்தியவர். தற்போது சர்வதேச ரீதியில் பிரபலமான "ஞானம்" இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியராகவுள்ளார்.

## ரா. நித்தியானந்தன்

சிறுகதை, கவிதை, விமர்சனம், ஆய்வு பேச்சு போன்ற துறைகளில் ஈடுபட்டுவருபவர் இதுவரை மூன்று நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி மாவட்ட தினக்குரல் வளர்ச்சியின் கொடிக்கால்கள்



பெ. பாலசுப்பரமணியம் ஜே.பி. (அ.இ)
தலைவர், கண்டி இந்து இளைஞர் மன்றம்



சேகரன் சோமபாலன் ஜே.பி.(அ.இ)
சமுகத் தொண்டர்



திருமதி. சந்திரவதனா ரத்னராஜ குருக்கள் ஜே.பி.(அ.இ)
சமுக சேவகி



எம். பெரிய சாமி ஜே.பி. (அ.இ)
துணைத்தலைவர், மத்திய மாகாண இந்து மாமன்றம்



என். எஸ். சிவானந்தன் ஜே.பி. (அ.இ.)
சமுகத் தொண்டர்



ஐ ஜனுஷன்
ஆங்கில விரிவுரையாளர்,
இயக்குனர், கண்டி ரோயல் நிறுவனம்,
UK உயர் கல்வி ஆலோசகர்



பிரேம் ராஜ்குமார் ஜே.பி. (அ.இ)
செயலாளர், கண்டி வர்த்தகச் சங்கம்

இது ஒரு தினக்குரல் கண்டி கிளையின் வெளியீடு

Printed by: SUNPRINTS 67, Mapanawathura Lane, Kandy. 077-6635662

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org